# எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் நினைவுச் சொற்பொழிவு

**தாம்பரம், செப். 7:** எழுத்தாளர் ராஜம்கிருஷ்ணன் நினைவுச் சொற்பொழிவு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சென்னை வண்டலூர் கிரசன்ட் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், சாகித்திய அகாதெமி நிறுவனம் ஆகியன இணைந்து இந்த சொற்பொழிவை நடத்தின.

இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து எழுத்தாளர் திருப்பூர் கிருஷ்ணன் பேசியது:-

தமிழ் எழுத்துலகில் கள ஆய்வுகள் மூலம் உண்மைகளைத் தெரிந்து கொண்டு, கற்பனைக் கதாபாத்திரங்கள் மூலம் சமூகப் பிரச்னை, அவலங்களை வெளிப்படுத்திய முதல் பெண் எழுத்தாளர் என்ற பெருமை ராஜம்கிருஷ்ணனைச் சாரும்.

மதுரை மாவட்டத்தில் நிலவிய பெண்சிசு கொலை குறித்து கள ஆய்வுகள் மேற்கொண்டு, அவர் எழுதிய புதினம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கென தனிக் காப்பகத்தை அவர் மைசூரு அருகில் தொடங்கி நடத்த தூண்டுகோலாக அமைந்தது என்றார்.

பேராசிரியர் கே.பாரதி, இ.ராஜலட்சுமி ஆகியோர் பேசினர். சாகித்திய அகாதெமி நிறுவன தமிழ் ஆலோசனைக் குழு உறுப்பினர் வைகைச் செல்வி, மதுரா கல்லூரி உதவி பேராசிரியை டி.காந்திமதி, மோ.பாட்டழகன், விஞ்ஞானி தேவவிரதன், கிரசன்ட் தமிழ்த் துறை பேராசிரியர் ராதிகா மேகநாதன் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினர்.

சாகித்திய அகாதெமி பொறுப்பு அலுவலர் டி.எஸ்.சந்திரசேகர ராஜு, கிரசன்ட் துணைவேந்தர் ஏ.பீர்முகமது, புல முதல்வர் அயூப் கான் தாவூத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.